සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
**WELFARE BENEFITS BOARD**

මුදල්, ආර්ථික සංවර්ධන, ප්‍රතිපත්ති සම්පාදන, සැලසුම් සහ සංචාරක අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC DEVELOPMENT, POLICY FORMULATION, PLANNING AND TOURISM

ජේ.ආර්. ජයවර්ධන මධ්‍යස්ථානය, නො.191, ධර්මපාල මාවත, කොළඹ 07 | ஜே ஆர் ஜெயவர்தன மையம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 7
J.R. Jayewardene Center, No.191, Dharmapala Mawatha, Colombo 07

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මාගේ අංකය<br>எனது இல<br>My No. | WBB/Notice/D/Div/2024 | ඔබගේ අංකය<br>உனது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2024.11.18 |

**Circular No - 24/2024**

அனைத்து பிரதேச செயலாளர்கள் / பிரதி நலன்புரி நன்மைகள் ஆணையாளர்கள்

**<u>அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்திற்கான இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான மேலதிக சலுகைக் காலத்தை வழங்குதல்.</u>**

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தற்போது சுமார் 455,000 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை முதலாம் மற்றும் இரண்டாம் கட்டத்திலோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் இருந்தால், அவர்களுக்கு வாய்ப்பு வழங்க மேலதிக கால அவகாசத்தை வழங்குவதற்காக அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி 25.11.2024 ஆம் திகதி முதல் 2024.12.02 ஆம் திகதி வரையான காலத்தினுள் இதுவரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காதவர்களுக்கு பிரதேச செயலகங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. இதற்காக இங்கு இரண்டாம் கட்டத்திற்கு அறிமுகம் செய்யப்பட்ட படிவத்தையே பயன்படுத்தித் தேவையான விண்ணப்பங்களை அச்சிட்டு உரிய முறையின் கீழ் தேவையான நபர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இந்த விண்ணப்பங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளுமாறும் விண்ணப்பத்தின் முடிவில் காணப்படும் பெற்றுக்கொண்டதற்கான பகுதியினைப் பூர்த்தி செய்து அதனை விண்ணப்பதாரருக்கு வழங்குவதற்கான ஆலோசனைகளை தங்களது உத்தியோகத்தர்களுக்கு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். இந்த விண்ணப்பங்களின் தகவல்களை IWMS முறைமையில் உள்ளிடப்படும் செயற்பாடு இதே காலப்பகுதியினுள் முடிக்கப்படவேண்டும் என்பது அவசியமானதாகும்.

முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆனால் முறைமையினுள் சேர்க்கப்படாத விண்ணப்பங்கள் இருந்தால், இந்த காலகட்டத்தில் அவற்றை முறைமையில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்கள் தொடர்பாக 2024 டிசம்பரில் எண்ணீட்டுப் பணி தொடங்கப்பட உள்ளதால், டிசம்பர் 02-ம் தேதிக்குள் இந்த நடவடிக்கைகள் யாவும் முடிக்கப்பட வேண்டியது என்பது மிக அவசியமானதாகும்.

කාර්යාලය / அலுவலகம் } Tel: 009411-2151481, 009411-2484600/4117 | විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் } welfarebenefitboard2016@gmail.com | වෙබ් අඩවිය / இணையதளம் } www.wbb.gov.lk

Scanned with CamScanner

மலையக தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த வீடுகளில் (லைன் ரூம்) வசிக்கும் குடும்பங்களைக் கருத்தில் கொண்டால், இடப்பற்றாக்குறையால் அதிக குடும்பங்கள் வசிக்கும் நிலை காணப்படுகிறது. ஒன்றாகச் சமைத்துத் தம்மைக் கவனித்துக் கொள்ளும் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பமாக இல்லாமல், அவ்வாறான தோட்ட வீடுகளில் உள்ள குடும்பங்களினைத் தனித் தனிக் குடும்பமாக விண்ணப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானம் வழங்கியுள்ளது. எனவே, இந்த விடயத்தினை தோட்டப் பகுதி வீடுகளில் மட்டுமே கருத்திலெடுத்துச் செயலாற்றுதல் வேண்டும்.

அத்தகைய குடும்பங்கள் ஏற்கனவே ஒரு குடும்பமாக இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பித்திருந்தால், புதிதாக விண்ணப்பங்களைச் சரியாகச் சமர்ப்பிக்க அவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களைக் கணனிமயமாக்கப்பட்டிருந்தால் அவற்றின் மூல விண்ணப்பங்கள் அகற்றப்பட்டு, புதிய விண்ணப்பங்களைத் சமர்பிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

இவ்வாறான விண்ணப்பங்களைக் கோருவது குறித்து, தேசிய ஊடகங்கள் மூலம் பரவலாக விளம்பரம் செய்ய நலன்புரி நன்மைகள் சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பிரதேச செயலக ரீதியாக விளம்பரம் செய்ய தேவையான நடவடிக்கை தங்களால் எடுக்கப்படவேண்டும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு, எழுதுபொருட் செலவுகளுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாவிட்டால், எதிர்காலத்தில் அதற்கான ஒதுக்கீடு வழங்க நடவடிக்கையெடுக்கப்படும்.

இவ் விடயத்தில் தாங்கள் வழங்கும் ஆதரவினைப் பெரிதும் மதிக்கின்றேன்.

ஒப்பம் :-

ஜயந்த விஜேரத்ன

தலைவர்/ஆணையாளர்

சீனிவாசன் கிரிதரன்

மேலதிக ஆணையாளர் (ஒருங்கிணைப்பு)

பிரதிகள் : 01. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம்.

02. செயலாளர், நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு.

03. செயலாளர், நீதி, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு.

04. அனைத்து மாவட்ட செயலாளர்கள்/மேலதிக நலன்புரி நன்மைகள் ஆணையாளர்கள்.-.

தேவையான ஒருங்கிணைப்பு
மற்றும் செயற்பாடுகளுக்குகாக



Scanned with CamScanner